## மதுரையில் போலீஸ் விசாரணைக்கு சென்றவர் மர்ம மரணம்?

# இறுதி அறிக்கையை டிச.31க்குள் தாக்கல் செய்ய உத்தரவு

**மதுரை, டிச. 22:** மதுரை, சோலையழகுபுரத்தை சேர்ந்தவர் பாலமுருகன். கடத்தல் வழக்கின் விசாரணைக்காக கடந்த 2019ம் ஆண்டில் அவனியாபுரம் போலீசார் அழைத்து சென்றனர். அப்போது போலீசார் அடித்து துன்புறுத்தியதால் பாலமுருகன் மரணமடைந்ததாகவும், பிரேத பரிசோதனையை வீடியோ பதிவு செய்யவும், நீதிபதி விசாரிக்கவும், உரிய இழப்பீடு வழங்கவும் கோரி பாலமுருகனின் தந்தை முத்துகருப்பன் ஏற்கனவே ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்திருந்தார். விசாரணை நிலுவையில் இருந்த போது, முத்துகருப்பன் தனது மனுவை வாபஸ் பெற்றார்.

இச்சம்பவம் குறித்து வக்கீல் ஹென்றிடிபேன், ஐகோர்ட் கிளை நிர்வாக நீதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தார். அதில் போலீசாரின் அச்சுறுத்தல் காரணமாக முத்துகருப்பன் மனுவை வாபஸ் பெற்றதாக கூறியிருந்தார். இந்த கடிதத்தின் அடிப்படையில் ஐகோர்ட் கிளை பதிவாளர் தரப்பில் தாமாக முன்வந்து பொது நல மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், பாலமுருகன் மர்ம மரணம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என கூறப்பட்டிருந்தது. இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்த போது, ஜனவரி 2022க்குள் விசாரணையை முடிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த மனுவை நேற்று மீண்டும் விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி, நீதிபதி புஷ்பா சத்யநாராயணா ஆகியோர் சம்பந்தப்பட்ட வழக்கின் விசாரணை தொடர்பான இறுதி அறிக்கையை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் டிச.31க்குள் சிபிசிஐடி போலீசார் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தனர்.

தினகரன்
Wed, 22 December 2021
https://epaper.dinakaran.com/c/65119637